

அன்புள்ள திடப்படுத்தல் எடுப்போரே,

நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியவும் அவரை சேவிக்கவும் வேண்டி அர்ப்பணிக்க இருக்கிறீர்கள். இதுவே நீங்கள் எடுக்கக்கூடிய சிறந்த தீர்மானம் என உறுதிகொள்ளுங்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் ஒரு போதும் வழி தப்பிப் போவதில்லை. நீங்கள் அவரை சேவிக்கும்போது, நீங்கள் ஒருபோதும் ஏமாற்றமடைவதில்லை என்ற உத்தரவாதம் இருக்கிறது.

கர்த்தர் உங்களை விசாரிப்பார். உங்கள் சகோதர சகோதரிகளாகிய நாங்களும் உங்களுக்கு உறுதுணையாக நிற்போம். இந்த புனிதமான வேளையில், திருச்சபையார் உங்களுடன் இணைந்து தேவனிடத்தில் கூறுகிறார்கள்:

> ***“உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக” (சங்கீதம் 143:10).***

நாமனைவரும் இணைந்து கற்க வேண்டிய அழகான காரியங்கள் அநேகம் இருக்கின்றன! மிகுந்த ஆசீர்வாதமும் திருச்சபையில் அதிக சந்தோஷமும் உண்டாயிருக்கும்படி நான் உங்களை வாழ்த்தி, என் அன்பிற்குரிய திடப்படுத்தல் எடுப்போரே, என் இதயப்பூர்வமான வாழ்த்துக்களையும் உங்களுக்கு அனுப்புகிறேன்.

Jean-Luc Schneider